மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரு கல்வி நிலையத்திற்கு நன்கொடையாக அளித்து விடுவார்களானால், அது கல்வி நிலையத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டும் அல்லது கல்வி நிலையத்திற்கு உரியதாக எழுதி வைத்து விடுவார்களானால், அதை மறுபடியும் எடுக்க முடியாது. இப்படி ரூ. 75 ஆயிரம் கொடுப்பது அந்தக் கல்வி நிலையத்திற்கு உரிய சொத்தே தவிர, தனிப்பட்டவர்களுக்கு உரிய சொத்து அல்ல. அப்படிப்பட்ட கட்டிடங்கள் எல்லாம் இந்த நிலையத்திற்கு உரியதாக இருக்கும். என்றைக்காவது விட்டுவிடவேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கு வழி இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட கட்டிடத்தை நன்கொடையாக அளிக்காமல், சிறிது காலத்திற்கு இரவலாக அதில் வகுப்புகளை நடத்திக்கொள்ளுங்கள் என்று சொன்னால், அப்படிப்பட்ட கட்டிடத்தை நாம்கூட கேட்க முடியாது. ஆனால் கொடுத்துவிட்ட, எழுதி வைத்துவிட்ட கட்டிடத்தை எடுக்க வழியில்லை.

Automobile Services and Repair Shops in Residential Areas in Madras City.

*237 Q.—THIRU D. V. D'MONTE : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government are aware that automobile service and repairs shops are springing up rapidly in residential areas in various parts in Madras City ; and

(b) if so, whether there are any proposals to put an end to this health hazard by providing suitable places for these shops away from residential areas ?

சென்னை மாநகரின் குடியிருப்புப் பகுதிகளின் மோட்டார் வண்டி பட்டறைகள்.

திரு. டி. வி. டி'மாண்டி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் மோட்டார் வண்டி பட்டறைகள் வேகமாகத் தோன்றி வருவதை அரசு அறியுமா ?

(இ) குடியிருப்புப் பகுதிகளுக்குத் தொலைவான இடத்தில் இப் பட்டறைகளுக்குத் தகுந்த இட வசதிகள் செய்து கொடுப்பதன் மூலம் இச் சுகாதாரக்கேட்டிற்கு முடிவு கட்டும் செயற்குறிப்புகள் எவையேனும் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

1975 ஏப்ரல் 11]

திரு. டி. சந்தோஷம் : தலைவரவர்களே, இது சென்னை மாநகரத்திற்கு மாத்திரம் தனியாக ஏற்படும் தொல்லை என்று எண்ணக்கூடாது. இது மதுரை, கோவை, திருச்சி போன்ற எல்லா நகரங்களிலேயும் உள்ள ஒரு பொதுவான தொல்லை என்று கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படும்போது எல்லா நகரங்களுக்கும் சேர்ந்தாற்போல் செயல்படக் கூடிய முறையில், விரிவான முறையில் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தற்போது சென்னை மாநகராட்சிக்கான சட்டம் திருத்தப்பட முடியுமா, எந்தெந்த வகையிலே திருத்தப்பட வேண்டும் என்று பரிசீலிக்கப்படுகிறது. அப்படிப் பரிசீலிக்கப்பட்டு அதிலே ஏற்றுக்கொள்ளப்படுகிற சீர்திருத்தங்கள் அல்லது மற்ற திருத்தங்கள் மற்ற மாநகராட்சிப் பகுதிகளிலும் இடம் பெற வேண்டுமென்ற அளவில் கருத்து வருமானால், அதற்குப் பிறகு யோசிக்கலாம்.

திரு. எல். பலராமன் : சென்னை நகரத்தில் மட்டுமல்லாமல் வேறு சிறுசிறு நகரங்களில், முனிசிபல் நகரங்களில் எல்லாம் இது போன்ற நிலை ஏற்படுவதை அரசு பரிசீலித்திருக்கின்றதா ? அதையெல்லாம் தவிர்ப்பதற்கு துரிதமான நடவடிக்கை எடுத்து, அதை ஒழுங்கு படுத்துவதற்கான ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முன்னாலேயே திரு. டி. சந்தோஷம் அவர்கள் அதைத்தான் கேட்டார்கள். தமிழ்தான் வேறு வேறாக இருந்ததே தவிர, கேள்வி ஒன்றுதான். இதற்கு விடையும் அதுவே தான்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மக்களுடைய வாழ்க்கைத்தரம் வெகுவாகவும் வேகமாகவும் உயர்ந்து வருகின்ற காரணத்தினாலே, எல்லோரும் வாகனங்களிலே போக ஆசைப்படுகிறார்கள். மோட்டாரில் பிளசராகப் போக ஆசைப்படுகிறார்கள். நாளுக்கு நாள், வருடத்திற்கு வருடம் இந்த மாதிரி ஸ்பெஷல் கார்கள் போவது ஜாஸ்தியாகிக் கொண்டிருப்பதனாலே, இந்த மாதிரியான பட்டறைகள் அதிகமாகத் தேவைப்படுகின்றன. அப்படித் தேவைப்படுகின்ற நிலைமையில் சட்டதிட்டங்களைப்போட்டு அந்த லொக்காலிடியிலிருந்து ஒதுக்கிக் கொண்டு போய்விட்டால்—இப்போதே பெட்ரோல் விலை ஒன்றுக்கு மூன்று பங்காகப் போய்க்கொண்டிருக்கின்றது, அடுத்து என்ன வரி போடப்போகின்றார்களோ அதுவும் தெரியாது—ஒரு தடவை ரிப்பேருக்காக பட்டறையில் கொண்டு போய்விட்டு ரிப்பேர் முடிந்து மறுபடியும் கொண்டு வருவது என்ற நிலைவரும்போது, தூரம் காரணமாக அதிகமான செலவு ஏற்படும். இந்த நிலைமையை மனதில் கொண்டு அனுபவசாலிகள் இருக்கும்படியான அளவுக்கு பட்டறைகள் வைக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குடியிருப்புப் பகுதிகளிலே இப்படிப்பட்ட பட்டறைகள் இருப்பதன் காரணமாக, அவைகளிலேயிருந்து ஏற்படுகின்ற புகை, தூசி, அழுக்கு இவைகள் எல்லாம் அந்தக் குடியிருப்புப்

பகுதிகளிலே இடையூறாக இருக்கின்றன என்பது ஒரு பொதுவான கருத்து. குடியிருப்புப் பகுதி அல்லாத பகுதிகளிலே, எந்த இடத்தை யார் விரும்புகிறார்களோ அங்கு வைத்துக்கொள்வதற்கு அனுமதி கேட்டு, அந்த அனுமதி அளிப்பது நியாயமாக இருந்தால், அதை வழங்குவதற்கு மாநகராட்சிக்கு ஒரு அதிகாரம் வருகிறது. இதற்கு முன்னால், அனுமதி இல்லாமலே அப்படி ஒரு சில தொழிற்சாலைகள் ஏற்பட்டன. மோட்டார் இல்லாத, எலக்ட்ரிசிடி இல்லாத இயந்திரங்கள் இருக்கின்றன என்றால், எந்த இடத்தில் வேண்டுமென்றாலும் வைத்து விடுகின்றார்கள். ஆகவே அவைகளை முறைப்படுத்துவது அல்லது கட்டுப்படுத்துவது என்பது காலத்தினுடைய தேவையாக இருக்கின்றது.

"Yoga" Exercises to the Prisoners.

*238 Q.—THIRU D.V. DMONTE: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there is any proposal with the Government to teach "Yoga" exercises to the prisoners?

கைதிகளுக்கு "யோகாசனப் பயிற்சி."

திரு. டி. வி. டி'மாண்டி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

காவலில் இருக்கும் கைதிகளுக்கு "யோகாசனப் பயிற்சி" அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

Youth Service Corps.

*239 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal with the Government to revise the service scheme of the Youth Service Corps in the State: and

(b) if so, the details thereof?

இளைஞர் அணி.

திரு. வே. தங்கப்பாண்டியன்: (அ) மாநிலத்தில் இளைஞர் அணியின் பணித்திட்டத்தை மாற்றியமைக்க அரசிடம் ஏதும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆமெனில் அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.